**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**MCOP NO. 158/2023**

**02.07.2025 ம .சா. 2 ரமேஷ், த.பெ. சுப்பிரமணி**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரர்கள் சுந்தரி, பாண்டியன் , ராஜிவ்காந்தி, தாட்சாயிணி ஆகியோரை எனக்கு தெரியாது. இந்த விபத்து 21.11.2022 அன்று பகல் 2.30 மணிக்கு கேட்டவரம்பாளைத்தில் இருந்து போளூர் செல்லும் சாலையில் நடந்தது. விபத்தில் இறந்துபோன நபர் பயணம் செய்த TVS XL வண்டியின் பதிவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. TATA ACE வண்டியின் பதிவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள வாகனங்களின் பதிவு எண்கள் நான் சொல்லவில்லை. நான் ஓட்டல் வைத்துள்ளேன். கலசபாக்கம் பதார்தம் வாங்க சென்றபோது அந்த நேரத்தில் அந்த விபத்து நடந்தது. விபத்தில் இறந்தவர் பெயர் தட்சணாமூர்த்தி. போலிஸ் அங்கு வந்து விசாரித்தபோது அவர் பெயர் தெரிந்து கொண்டேன். நான் இந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் அவ்வாறு பார்த்திருந்தால் விபத்து சம்மந்தப்பட்டகுற்ற வழக்கில் போலிசார் என்னை கண்ணுற்ற சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால் நான் ஓட்டல் வைத்திருப்பதால் அடிக்கடி சாட்சி சொல்ல வரமுடியாது என்று சொல்லிவிட்டேன். இந்த வழக்கில் சாட்சி சொல்ல மனுதாரரின் வழக்கறிஞர் என்னை அழைத்தார். இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் நான் பார்த்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு மனுதாரர்களை பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ராஜிவ்காந்தி என்ற பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.